பக்கங்கள் : ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 5 சனிக்கிழமை (19.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 173

# சுயவிருப்புடன் மீளக்குடியமர்வோருக்கு மட்டுமே

# உதவி வழங்க முடியுமென ஐ.நா. அமைப்பு நிபந்தனை



## அகதிகளுக்கு உணவு வசதி அளிக்க உடனடியாக 10 மில்லியன் டொலர் அவசரநிதியும் கோருகிறது

கொழும்பு, மே 19

**அகதிகள், அவர்களது சுயவிருப்பத்துடன் மீள் குடியமர்த்தப்பட்டால் மட்டுமே அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படும்.**

**ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்பான உலக உணவுத் திட்டம் இவ்வாறு அரசாங்கத்துக்கு நிபந்தனை விதித்துள்ளது.**

இத் தகவலை உலக உணவுத் திட்டத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் ரொனி பன்பெரி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்த தகவலை வெளியிட்டார்.

உலக உணவுத் திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து நேரில் கண்டறிவதற்காக, ரொனி பன்பெரி நான்கு நாள்கள் இலங்கையில் தங்கியிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில், உள்நாட்டில் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உலக உணவுத் திட்டம் செய்யும் பணிகளை நேரில் பார்வையிட்ட அவர் -

மீளக்குடியமரும் மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு அரசு எம்மைக் கேட்டுள்ளது -

சுயவிருப்பத்தின் அடிப்படையில் மீளக் குடியமர்த்தப்படுபவர்களுக்கு மட்டுமே உதவி வழங்க முடியும் என இலங்கை அரசுக்கு நாம் நிபந்தனை விதித்துள்ளோம் -

சுயவிருப்பத்துக்கு மாறாக - பலவந்தமாக - மீளக் குடியமர்த்தப்படுபவர்களுக்கு உதவி வழங்க மாட்டோம் என்று இலங்கை அரசிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளோம் - என்றார்.

இடம்பெயர்ந்த மக்களின் சுயவிருப்பத்துக்கு மாறாக அரசாங்கம் கிழக்கில் அகதிகளை மீளக்குடியேற்றுவதற்கு பெரும் எடுப்பில், முனைப்புடன் செயற்பட்டு வரும் இவ்வேளையில் உலக உணவுத் திட்டப் பிராந்திய இயக் குநரின் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களில் எழுவது சதவீதமானோருக்கு ஐ.நா.வின் உலக உணவுத் திட்டமே உணவு உதவி வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கான உதவிப் பணிகளைச் செய்வதில் பத்து அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. இதேவேளை -

இலங்கையைப் பொறுத்தவரையில், உலக உணவுத் திட்டத்துக்கு, அதன் உதவிப் பணிகளுக்கு 10 மில்லியன் டொலர்கள் உடனடியாகத் தேவைப்படுவதாகவும், உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து அந்தத் தொகையைத் தந்து உதவுமாறு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டிப்பதாகவும் ரொனி பன்பெரி கூறினார்.

அடுத்த ஆறு மாதங்களுக்கு அவசிய மனிதாபிமான உணவு உதவியினை வழங்குவதற்கு மேற்படி, தொகை தேவைப்படுவதாகவும் அவர் மேலும் சொன்னார். (அ)

## தமிழக மீனவர்கள் 11 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்!

### சென்னையில் வைத்துத் தீவிர விசாரணை

சென்னை, மே 19

இலங்கை மற்றும் இந்திய கடற் பரப்புக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்து கடந்த மாதம் கடத்திச்செல்லப்பட்ட 12 தமிழக மீனவர்களில் 11 பேர் நேற்று விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் ஐவர் நேற்று மாலை இராமேஸ்வரம் கரையை வந்தடைந்தனர். அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை சென்னையில் இடம்பெற்று வருவதால் ஐவரும் சென்னைக்கு அனுப்பப்பட்டனர் என்று இராமேஸ்வரம் பொலிஸ் அத்தியட்சகர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இவர்கள் ஐவர் தவிர ஏனையோரில் 6 பேர் வள்ளம் ஒன்றில் நேற்றுமாலை இராமேஸ்வரம் கரைக்கு வந்து கொண்டிருந்தனர் என்றும், கேரளாவைச் சேர்ந்த இன்னொருவர் படகு ஒன்றில் அங்கு அனுப்பப்பட்டனர் என்றும் தமிழகத் தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இவர்களைக் கடத்தியவர்கள் யார் என்ற தகவல் நேற்றிரவுவரை வெளியாகவில்லை. விடுவிக்கப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்ட பின்னரே அது தொடர்பான விவரங்கள் தெரியவரும் என்று தமிழக பொலிஸ் மா அதிபர் முகர்ஜி நேற்றிரவு தெரிவித்தார்.

இந்த மீனவர்களை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றனர் என்று சமீபத்தில் முகர்ஜி தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## கிராண்ட்பாஸில் 4 தமிழர்கள் கைது

கொழும்பு, மே 19

காலித்துறைமுகத்தின் வரைபடத்தை வைத்திருந்தனர் எனக் கூறப்படும் 4 தமிழர்களை படையினர் கைதுசெய்திருக்கின்றனர்.

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு படை யினர் மேற்கொண்ட தேடுதலின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 4 தமிழர்களும் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (சி)

## ஜோர்தானில் ஜனாதிபதிக்கு அரச மரியாதையுடன் வரவேற்பு

கொழும்பு, மே 19

உலகப் பொருளாதார உச்சிமாநாடு மற்றும் ஜி - 11 உச்சிமாநாடு ஆகியவற்றில் கலந்துகொள்ளச் சென்றிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜோர்தானில் அரச மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் ஜோர்தானின் குயத் அலியா சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி தலைமையிலான இலங்கைக் குழுவினரை ஜோர்தானின் வீடமைப்பு அமைச்சர் அபு ஹெய்டா வரவேற்றார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலகப் பொருளாதார உச்சிமாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் நேற்று ஜனாதிபதி ராஜபக்ஷ கலந்துகொண்டார். (சி)

## ஓமந்தைச் சோதனை நிலையம் 2ஆவது நாளாக நேற்றும் பூட்டு

### அவசர நோயாளரைக் கொண்டு செல்ல முடியாத அவலநிலை

கிளிநொச்சி, மே 19

ஏ-9 பாதையில் ஓமந்தை சோதனை நிலையம் இரண்டாவது நாளாக நேற்றும் மூடப்பட்டிருந்தது. இதனால் அவசர நோயாளர்கள் 46பேரை வவுனியா ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்குக் கொண்டு செல்ல முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஓமந்தை சோதனை நிலையப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பரஸ்பர ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதை அடுத்து பாதை மூடப்பட்டது.

தமக்கும் பொதுமக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்து, அங்கிருந்து வியாழனன்று வெளியேறிவிட்டது.

நேற்று செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் பிரசன்னம் ஓமந்தை மற்றும் உயிலங்குளம் சோதனை நிலையங்களில் இல்லாமையால், அந்தப் பாதைகள் ஊடான போக்குவரத்துகள் இடம்பெறவில்லை.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள், படையினர் மற்றும் விடுதலைப் புலி

(05ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை வழமை நிலைக்குக் கொண்டுவர முயற்சி

யாழ்ப்பாணம், மே 19

யாழ். பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்விச் செயற்பாட்டை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பல்கலைக்கழக பேரவை விசேடமாக நேற்றுக் கூடியது. பல்கலைக்கழகத்தை மூடும் சூழல் உருவாகி, வெளி மாவட்ட மாணவர் தமது பிரதேசங்களுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய இக்கட்டான நிலை குறித்தும் பேரவையில் ஆராயப்பட்டது.

பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான வழிமுறைகள் குறித்து சில முடிவுகள் எடுக்கப்பட்டதாக அறியவந்தது.

பேரவைக்கூட்டத்தை அடுத்து, பதில்துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல், யாழ். அரச அதிபர் கே. கணேஷ்,

(05ஆம் பக்கம் பார்க்க)

## கரம்பொன் கடற்கரையோரத்தில் மீனவர் இருவரின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 19

ஊர்காவற்றுறை, கரம்பொன், புதுக்குடியிருப்புப் பகுதி கடற்கரையோரத்தில் இருவரின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டன. அந்தச் சடலங்கள் பின்னர் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன.

மரணமான இருவரும் தொழிலுக்காக கடலுக்குச் சென்ற மீனவர்கள் என்று அறியவந்தது.

இதேவேளை - அந்தப் பகுதியில் இரு சடலங்கள் இருப்பதாகவும் அவற்றுக்கு அருகில் ஆயுதங்கள் இருப்பதாகவும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் நீதிமன்றத்துக்கு தகவல் கொடுத்தனர்.

அதனை அடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி விசாரணைகளை நடத்தினார்.

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் படகில் வந்த இருவர் எங்கள் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர். நாங்கள் பதில்

(05ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கல்வியைத் தொடர இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும்

### ஈ.பி.டி.பி. அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 19

மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான இயல்புச் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று நாம் அரசிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் தொடர்கின்ற ஆள்கடத்தல்கள், கொலைகள் என்பவற்றை நாம் தொடர்ந்து கண்டித்து வந்துள்ளோம். அதிலும் மாணவர்கள் மீதும் ஆசிரியர்கள் மீதும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதையும், மாணவர்கள் நால்வர் காணாமல் போயிருப்பதையும் அறிந்து நாம் எரிச்சலடைந்திருப்பதோடு, எமது மாணவச் செல்வங்களைத் தேடிக்கண்டுபிடித்து பெற்றோர்களிடம் ஒப்படைக்க உரிய தேடுதல்களையும் விசாரணைகளையும் செய்ய

(05ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி - 2007

மேற்படி பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவரங்களடங்கிய விண்ணப்படிவத்தை 31.05.2007 ஆம் திகதிக்கு முன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.


வயது எல்லை : 18 - 35

பயிற்சிக்காலம் : மூன்று மாதங்கள்

இல.372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 6251 (சி/52437)

உதவிப் பணிப்பாளர்,
கடற்றொழில் மற்றும்
கடலோட்டு எந்திரவியல் கல்லூரி.

## பத்தாண்டு நினைவு அஞ்சலி



### இராசரத்தினம் இராசேந்திரா

மலர்வு: 19.05.1969

உதிர்வு: 19.05.1997

ஆண்டுகள் பத்து ஆனாலும்
ஆறாது நம் துயரம்
என்றும் உன்
நினைவுகளுடன்
எம் இதய விழிகளில்
சுமை நீரோடு வாடும்.


முதலாம் கட்டையடி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (சி/52414)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 * 04 * 1933

மறைவு 29 * 05 * 2006



### அமரர் கதிரேசு சட்டநாதன்

திதி: 19.05.2007

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது - ஐயா
எத்தனை வருடங்கள் ஆனாலும் எமதருமை - ஐயா
உங்கள் நினைவு எப்போதும் எம்மைவிட்டு நீங்காது - ஐயா
மீண்டும் ஒருமுறை எம்முடன் வாழ பிறந்து வாருங்கள் - என்று
இறைவனை நாளும் வேண்டுகின்றோம் - ஐயா

என்றென்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பிறவளவு', அல்வாய் வடமேற்கு.
அல்வாய், திக்கம்.
(60711)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 : 02 : 1925

விண்ணில் 10 : 06 : 1986



### அமரர் தம்பு கதிரவேலு

(ஓய்வுபெற்ற அதிபர், கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)

**திதி: திருதியை 19.05.2007**

இறையோடு இணைந்திட்ட எமதன்புத் தெய்வமே!
என்றென்றும் எம் நெஞ்சோடு
அழியாத நினைவாக நிலைத்திருக்கும்
தங்கள் மகத்தான நினைவுகளை
மறந்திடத்தான் முடிந்திடுமா?
நிதம் அணையாத தீபமாய்
எம் வாழ்வின் வழிகாட்டியாய் இருந்து
எமைக் காத்தீர்கள்
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றும் இறைஞ்சுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருவத்தர்பை, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

தங்களின் நினைவில் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இறைச்சிக் கோழி

ஐஸ் புறொயிலர் இறைச்சி, கல்பேட் இறைச்சி என்பன விற்பனைக்கு உண்டு.

**NEW R.S.K. Farm**

மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.

## கடைகள் வாடகைக்கு

மானிப்பாய் ஆலடிச் சந்தியில் நான்கு கடைகள் வாடகைக்கு உள்ளன.

ஐஸ்கிறீம் வியாபாரம், கொம்பியூட்டர் பிறின்ட், எலக்ரோனிக், பாமசி போன்றவற்றிக்கு உகந்தது.

தொடர்பு: V.K.P சோதி, APC வீதி,
உடுவில், சுன்னாகம்.
T.P.: 077 6135593

## வகுப்புகள்

க.பொ.த சாதாரணதரத்தில் English, கணித பாடங்களில் அதி விசேட சித்திபெற பயிற்றப்பட்ட, அனுபவம்மிக்க ஆசிரியரினால் குழுவாகவும் தனியாகவும் பகல் நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

நேரம்: மு.ப 8 - நண்பகல் 12

T.P.: 077 6449899

தொடர்புகளுக்கு:
இல.193, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(60701)

## கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பட்டப்படிப்பு

வங்கி நிலுவைகள், தூதரக நேர்காணல் தேவையில்லை. அங்கிருந்து வேறு நாடுகளுக்குச் செல்ல அறிவுரைகள், ஏற்பாடுகள். ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உறவினர்கள் இருப்பவர்களுக்கு இலகுவாக அங்கு செல்ல ஏற்பாடுகள்.

**OVERSEAS STUDENT PROGRAMME**

இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். தொ.பே. 0777250555
(தொலைபேசியில் தொடர்புகொண்டு சந்திக்கவும்.)

## COMPUTER EXPRESS

புதிய கிளை திறப்புவிழாவுடன் நாம்...!

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sramboyadi Lane
(off Stanly Rd.)
021-222 6250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd.
(Near Uthayan Publication)
Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 21/05/2007- 09.00

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 18/05/2007, 19/05/2007 20/05/2007, 23/05/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை செல்லம்மா



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை செல்லம்மா நேற்று முன்தினம் (17.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைதடி கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் - நாகமுத்து தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமைமருமகளும் செல்லையா சின்னத்துரை (ஓய்வுபெற்ற முன்னாள் ஊழியர், முதியோர் இல்லம், கைதடி) அவர்களின் அன்பு மனைவியும் சிவாஜினி (கொழும்பு), சிவமதி (லண்டன்), சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் கிருஷ்ண குமார் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியும் சுவிஷன் (லண்டன்), தினுஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான குஞ்ஞாலி, பொன்னையா மற்றும் சின்னம்மா, தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2007) சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்லகம்,
கைதடி கிழக்கு, கைதடி. (60714)

தகவல்:
செ.சின்னத்துரை
(கணவர்).

## Hatton National Bank

### அடகுப்பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.03.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருள்கள் 26.05.2007 சனிக்கிழமை அன்று இல.62, 64 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்

- ❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

- ❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

(சி/52438)

முகாமையாளர்.

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 25 * 01 * 1925

ஆண்டவன் அடியில் 19 * 05 * 2006



### அமரர் மார்க்கண்டு யோசேப்

ஆண்டொன்று சென்றது ஐயா
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவைகள் அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டு ஒன்றென்ன? பலசென்றாலும்
எங்கள் விழிகளில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் இனிய முகம்
உங்கள் ஆத்மசாந்திக்காய்
அனுதினம் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

இல.25A, மூளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(60715)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தசாமி கனகாம்பிகை

(பரமேஸ்வரியக்கா)

திதி: 19.05.2007

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
பரிவுக்கு மேல் இடமாய
குடும்பத்தின் குலவிளக்காய்
எம் நட்புக்கு எடுத்துக் காட்டாய்
திகழ்ந்த தாயே
இன்று உமது ஓராண்டு நிறைவானதே
உம் இனிய வதன முகமும்
நினைவுகளும்
எம்மை விட்டு என்றுமே நீங்காதக்கா
கண்ணீர் மலர் தூவி வணங்குகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு: 12-05-1944

உதிர்வு: 29-05-2006

மயிலு வீதி,
ஆறுகால் மடம். (60173)

தகவல்:
க.கணேசமூர்த்தி புஸ்பா
(நட்புக்காக).

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கிருஸ்னாநந்தன் இந்திரா



மலர்வு: 09.09.1964

உதிர்வு: 21.05.2000

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து
ஏழாண்டுகள் ஆனதோ!

மீசாலை மேற்கு,
மீசாலை. (60549)

கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,மே 19

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு ஐந்து நாள்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. யாழ்.நகர் முஸ்லிம் பள்ளிவாசல் வீதியிலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்ட உதவியாளருக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-95-27)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 19

கைதடி முன்பள்ளிகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா தலைமையில் நடைபெறும் இப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (202-207)

## யாழ்.தபாலகத்தில் கற்றல் உபகரணங்கள் விற்பனை

யாழ்ப்பாணம்,மே 19

குடாநாட்டு மாணவர்களின் நலன்கருதி யாழ்.பிரதம தபாலகத்தில் தபால் கடை (Post Shop) ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக் கடையில் மாணவர்கள் தமக்குத் தேவையான கற்றல் உபகரணங்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.பிரதம தபாலதிபர் கே.துரைசிங்கம் தெரிவித்தார்.

குடாநாட்டில் மாணவர்கள் கற்றல் உபகரணங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு யாழ்.தபாலகத்தினர் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் கற்றல் உபகரணங்களைத் தருவித்துள்ளனர். மாணவர்கள் அதன் மூலம் பயன் பெறலாம் - என்றும் தபாலதிபர் தெரிவித்தார்.

இதேவேளை -

பிரதம தபாலகத்தில் பிரதியிடல் சேவை (Photo Copy)யும் நடைபெறுகின்றது. குறைந்த கட்டணத்தில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-111)

## மருத்துவ முகாம்

வடமராட்சி,மே 19

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பல்துறைசார் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்.போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழு ஆகியன இணைந்து இந்த முகாமை நடத்தவுள்ளன.

இதில் சத்திரசிகிச்சை மருத்துவம், பெண் நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல்,புற்றுநோயியல், கண் நோயியல், சலரோகம், சருமநோயியல் சார் மருத்துவர்கள் கலந்துகொண்டு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் இரத்த அழுத்த சோதனைகள் மற்றும் சிறுநீர், இரத்த சோதனைகள், உடல் உறுப்பு பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (203-160)

## மாரீசன் கூடலில் கைவினைத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே19

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் தேசிய உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் என்னும் நோக்கிலான கைவினைத்திறன் வெளிப்பாட்டுக் கண்காட்சி இன்றும் நாளையும் முற்பகல் 10 மணிமுதல் 3.30 மணிவரை மாரீசன்கூடல் ஆலய வளாகத்தில் நடத்தப்படவுள்ளது.

மக்கள் குழுத் தலைவர் அ.யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி தேவசகாயம் ஆசிச் செய்தி வழங்கவுள்ளார். இந் நிகழ்விற்கு சண்டிலிப்பாய் பிரதே செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (1-203)

## புனரமைப்பிற்கு நிதி

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் திருநெல்வேலி மீன்சந்தை, கோண்டாவில் பொதுநூலகம் ஆகியவற்றின் புனரமைப்பிற்கென 10 இலட்சம் ரூபா பிரமாண அடிப்படையில் மூலதன நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (203-111)

# குறிகாட்டுவானில் பஸ்கள் தரிக்காமையால் கப்பல் பயணிகள் பெரும் சிரமம்

நல்லூர்,மே 19

குறிகட்டுவான் துறைமுகத்தில் நின்று பயணிகளை ஏற்றும் இ.போ.ச. பஸ்கள் சில சமயங்களில் துறைமுகத்தில் இருந்து 500 யார் தூரத்திற்கு அப்பால் நின்று பயணிகளை ஏற்றி வருவதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துறைமுகத்தில் பஸ் நிற்காது விடுவதால் பயணிகள் அங்கு நிற்பது தெரியாது பஸ் புறப்பட்டு விடுகின்றது.

இதனால் நீண்ட நேரம் அங்கு அவர்கள் காத்திருந்து அடுத்து வரும் பஸ்ஸிலேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக பயணிகள் தாம் செய்ய வேண்டி வந்த வேலைகளை இடை நடுவில் விட்டு மீண்டும் தமது ஊர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையால் தீவுப் பகுதி மக்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர். (203-111)

# மூதறிஞர் வரதரின் நினைவுகூர் அஞ்சலி நிகழ்வு நாளை ஆதீனத்தில்



யாழ்ப்பாணம்,மே 16

மூதறிஞர், மூத்தபடைப்பாளி, சாகித்தியரத்தினம் வரதரின் நினைவுகூர் அஞ்சலி ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

எழுத்தாளர் செங்கைஆழியான் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், வரதர் அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வரதர் நினைவுமலர் வெளியீடும் வரதரின் நிறைவுகால நூல்களான யாழ்ப்பாண தேசம், கிரண்பேடி, மனிதர்களின் தேவைகள், பூதத்தம்பி ஆகிய நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் மதிப்புரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்துவர். யாழ்.இலக்கிய வட்டமும் வரதரின் குடும்பத்தினரும் இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளனர். (அ-28-203)

# மானிப்பாய் சங்க கிளைகள் ஊடாக மண்ணெண்ணை விநியோகம் செய்க

### விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மே19

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் சங்கக் கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கான மண்ணெண்ணையையும், விவசாயிகளுக்கான விவசாய அட்டைக்கான மண்எண்ணையையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் பொது முகாமையாளருக்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி. பொ.மா.க.முதலியார் இவ் வாரம் அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் ஆலடி சந்திக்கு அருகாமையிலுள்ள சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து மண்எண்ணை வழங்கப்படுவதால் தூர இடங்களிலுள்ள மக்களுக்கு எப்போது மண்எண்ணை வழங்கப்படும் என்ற தகவல் எதுவும் தெரியாது உள்ளது.

இதனால், மண்எண்ணையைப் பெறும் வாய்ப்பை தவறவிட்டுவிடும் நிலை பலருக்கு ஏற்படுகிறது. ஆகவே கிராம ரீதியாக செயற்படும் சங்கக் கிளைகள் உடாக இந்த விநியோகத்தை மேற்கொண்டால் மக்கள் பங்கீட்டு அட்டைக்கான மண்எண்ணையை தவறாது இலகுவாக பெற்றுக்கொள்ள வசதி ஏற்படும் என்றும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-135)

# நயினாதீவு, அனலைதீவு அம்புலன்ஸ் படகு சேதமடைந்ததால் அவசர நோயாளர் பாதிப்பு

குருநகர், மே 19

நயினாதீவு - அனலைதீவுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நோயாளர் அம்புலன்ஸ் படகு பழுதடைந்துள்ளது. இதனால் அவசர நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அம்புலன்ஸ் படகின் சுக்கான் பழுதடைந்துள்ளதாலேயே படகை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

படகைத் திருத்தும் பணி சுகாதாரத் திணைக்களத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்னும் சில நாள்களில் அம்புலன்ஸ் படகு சேவையிலீடுபடுத்தப்படும் என்று பிரதி மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பா[illegible] கேதீஸ்வரன் தெரிவித்தார். (1-202-51)

# யாழ். - ஏழாலை பஸ் சேவை இடைநிறுத்தம்; பொதுமக்கள், மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

ஏழாலை,மே 19

யாழ்.நகரிலிருந்து ஏழாலை, குப்பிளான் பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடும் 770, 764/1 இலக்க பஸ் சேவைகள் கடந்த சில வாரங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ்.நகரிலிருந்து கே.கே.எஸ். வீதியூடாகவும் பலாலி வீதியூடாகவும் சேவையில் ஈடுபடும் பஸ் சேவைகளே இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பஸ் சேவை இடைநிறுத்தத்தால் தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களும் பொதுமக்களும் மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களிலிருந்து பல மைல் தூரம் நடத்து செல்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து பஸ் சேவையை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-45)

## கடுங்காற்றினால் கல்விச் செயற்பாடுகள் வன்னியில் பாதிப்பு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பலத்த காற்று வீசி வருவதால் பல பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல பாடசாலைகள் சேதமடைந்து தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கி வருகின்றன. இப்போது தொடர்ந்து வீசி வரும் பெரும் காற்றுக் காரணமாக பாடசாலைக் கூரைகள் பலவும் தூக்கி எறியப்பட்டுப் பலத்த சேதத் திற்கு உள்ளாகியுள்ளன.

காற்றின் பாதிப்பினால் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மர நிழல்களிலேயே கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். (அ-68)



*கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாயலத்தின் மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவன் சி.வினோஜனுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரனின் பாரியார் திருமதி பாஸ்கரி கேதீஸ்வரன் வெற்றிக்கேடயத்தை வழங்குவதையும் அருகில் அதிபர் இ.இராகவன் நிற்பதையும் படத்தில் காணலாம். (160)*

## பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம்,மே19

வேலையற்ற பட்டாரிகள் கல்வி அமைச்சின் கீழ் சில பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படவுள்ளனர்.

அபிவிருத்தி உதவியாளர், திட்டமிடல் உதவியாளர், நிதி உதவியாளர் ஆகிய 3 பதவிகளுக்கு வேலையற்ற பட்டதாரிகளிடமிருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 45 வயதிற்குட்பட்டவராக இருக்கவேண்டும். பட்டம் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு ஆட்சேர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்களை மேலதிக செயலாளர் (நிர்வாகமும் நிதியும்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இவ்வருடத்தில் 5ஆயிரம் பட்டதாரிகளுக்கு பல்வேறு அமைச்சுக்களிலும் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-95)

## விவசாய வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு,மே19

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன பிரிவிலுள்ள கட்டுடை விவசாய வீதி மற்றும் இடி குண்டடியிலிருந்து சங்கரத்தை வரை செல்லும் கிராய் விவசாய வீதி ஆகியவற்றை விரைவில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.நீர்ப்பாசனத் திணைக்களம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் இவ்விரு வீதிகளையும் ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்று புனரமைப்பு செய்யவுள்ளது. (203-135)

## அலுவலகப் பொருள்கள் கையளிப்பு

வலி.தென்மேற்கு,மே19

சர்வதேச கெயார் நிறுவனம் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் பதினொரு கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றுக்கு அலுவலகப் பாவனைப் பொருள்களை வழங்கியுள்ளது.

கடந்த வாரம் சண்டிலிப்பாயிலுள்ள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கெயார் நிறுவனம் நடத்திய பயிற்சிப் பட்டறையின் போது மேற்படி சங்கங்களுக்கு மலசிக்கூடு, சி.ஆர் கொப்பிகள் உட்பட மற்றும் பல அலுவலகப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (203-13[illegible])

## இடர் முகாமைத்துவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே19

மாவட்ட இடர்முகாமைத்துவ க்லந்துரையாடல் அடுத்த மாதம் 5ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் கிராமிய மட்ட, பிரதேச மட்ட, மாவட்ட மட்ட இடர் முகாமைத்துவம் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுக்களின் முன்னேற்ற விவரம் ஆராயப்படும்.

சுனாமி போன்ற கடல் அபாயத்தினால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயத்தை அறிவிக்க 24 மணிநேரம் செயற்படக்கூடிய தகவல் மையம் அமைக்கப்படுவது பற்றியும் இதில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (203-95)

## மின்தடை நேரத்தில் திருடர்கள் கைவரிசை

உடுப்பிட்டி,மே19

வடமராட்சியில் இரவுநேர மின்தடைகளைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

அண்மையில் இரவு மின்தடையின்போது வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வீதியிலுள்ள தபாற்கந்தோரிலும் பருத்தித்துறை வீதியிலுள்ள தனியார் வர்த்தக நிலையத்திலும் பணம் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுக்கள் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-155)

## சாவகச்சேரி ப.நோ.கூ.கிளைகளில் கற்றல் உபகரணங்கள் விற்பனை

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கக் கிளைக் கடைகளில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அப்பியாசப் புத்தகங்கள், பென்சில்கள், நிறம் தீட்டும் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டிகள் உட்பட மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியால் உயர்ந்த பண்பான அதிபரின் மணிவிழாச் சிறப்பு மலர் - 19.05.07

## யாழ்/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

### யாழ் ஆயரின் ஆசிச்செய்தி

எண்ணும் எழுத்தும் அறிவித்தவர் இறைவனாவார் என்பதற்கொப்ப கல்விப்பணியை பெரிதும் மதிக்கும் யாழ்மண்ணில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையை சார்ந்த அருள்சகோதரி தேவநேசம் புனித ஆசீர்வாதப்பர் பாடசாலையில் பணியாற்றிய காலம் பொன் எழுத்துக்களால் வரையப்படவேண்டிய காலமாகும்.

கல்வியிலும் விளையாட்டிலும் கலைகளிலும் மாணவர்கள் உயர்ச்சிகாண அரும் பாடுபட்டு உழைத்தவர். ஆசிரியர்களை தன்வயம் இழுத்து அவர்களிடமும் அன்பாகப் பழகி அவர்களின் பணியையும் முழுமையாகப் பெற்றுக்கொண்டவர். பெற்றோர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றவர், அதனால் பாடசாலை துரித கெதியில் அபரீத வளர்ச்சி கண்டது. பிள்ளைகளின் நல்லொழுக்கத்திலும் உயர்விலும் மகிழ்ச்சி அடைந்த அருள்சகோதரி தேவநேசம் பிள்ளைகளாலும் பெற்றோராலும் மறக்கப்பட முடியாதவராவார். ஓய்வு பெறும் இவரின் தொடர் பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். ஆயர்**

### கடமையே கண்ணாயினார்

அருட்சகோதரி தேவநேசம் தனது சமயவாழ்க்கையுடன் கல்விக்குத் தொண்டாற்றியமையால் மாணவர்களிடையே சிறந்த பண்பும், ஒழுக்கமும் உருவாவதற்கும் காரணமாகின்றார். இவ்வதிபரின் பெருமுயற்சியினால் இப்பாடசாலையில் தரம் 5 இற்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்திப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். கடந்த ஒரு தசாப்த காலமாக கண்ணெனப் போற்றி இப்பாடசாலையை வளர்த்தவர் அதிபர் அருட்சகோதரி தேவநேசம் என்றால் மிகையாகாது.

எவ்வெவர் தீமையும் நோக்காமல் கடமையே கண்ணாக மாணவர்களுக்கு உழைத்தமைக்கு கல்விச் சமூகத் தின் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். ஓய்வு காலத்தில் தனது சமயத்தொண்டுடன் கல்வித் தொண்டும் ஆற்ற வேண்டும் என ஆங்கிலப் புலமையுள்ள அதிபர் அருட்சகோதரி தேவநேசத்தை வேண்டுகின்றேன்.

**வே.தி. செல்வரத்தினம்**
**வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

### Message from tne Provincial Superior of the Apostolic Carmel (Sri Lanka)

It is with great pleasure that I respond to your request for a Message to the issue of the College megazine appreciating the dedicated services rendered by our dear Sister Thevanesam. A.C. to St. Benedict's Vidyalayam. In congratulating her I thank God for what she has achieved for the betterment of society which I hope will be continued all through the future,

May I take this opportunity to thank the parents, teachers, students and well wishers who accompanied her and cooperated with her in her good work. As she retires from teaching profession I wish her many more fruitful years of service in whatever tasks assigned to her. May Our Lady of Mount Carmel protect and guide her always.

**Sr. M. Sunitha. A.C.**
**88. Ananda Rajakaruna Mawatha, Colombo 10.**

### நாச்சியம்மன் ஆலய குருவின் ஆசிச் செய்தி

அருட் சகோதரி தேவநேசம் அவர்களே!
கர்த்தரின் அடியாளாகிக் கருத்துடனே செயல்பட்டுக்
காலமெல்லாம் அவர் ஆசி பெற்றுமே வாழ்ந்திடுவீர்.
கர்த்தரின் பணியோடு கல்வியென்னும் கண் கொடுக்கும்
ஒப்பற்ற சேவையிலும் உம்மை நீர் அர்ப்பணித்தீர்.
பள்ளிச் சிறுவர்களின் பசியென்னும் பிணி போக்கி
மலர்ந்திட்ட முகங்கண்டு மகிழ்ச்சியிலே நீர் திளைத்தீர்.
சமயப் பணியோடு சமூகப் பணிகளிலும்
தவறாது ஈடுபட்டுத் தனித்துவமாய்ச் செயல்பட்டீர்.
இத்தனையும் திறம்படவே செய்து வெற்றி கண்டநீர்
இளைப்பாறிய பின்னரும் இறை பாத சேவை என்னும்
ஈடற்ற தவநெறியில் உம்மை நீர் அர்ப்பணித்து
பல்லாண்டு காலம் இறை சேவை செய்திடவே
பாணன் குளம் நாச்சியம்மன் பாதத்தினை வேண்டுகிறேன்.

**அம்பிகை ஆராதனர்**

### அன்னையான எம் அதிபர்

வெண்ணிற உடையணிந்த தெய்வம் தந்த "தேவநேசம்"
கள்ளம் இல்லாத உள்ளம் களங்கம் இல்லாத கைகள்.
தெள்ளிய அறிவின் மேன்மை சாந்தம் மிளிரும் வதனம்.
பாசமுடன் பாலரை அரவணைத்து வித்தைகள் பலவும் சொல்லி
தெய்வ வழியில் நாம் செல்ல இறைவனை எமக்கு உணர்த்தி.
அன்புடனும் பண்புடனும் சிறுவர் எமக்குச் சிறந்த வித்தைகள்
பலவற்றைச் சிறப்புடன் கற்றிட உதவிய எம் இனிய அதிபரை
நூறு வயது ஆகும் வரை அவர் சேவை புரிய நோயில்லா மேனி
வேண்டும் எல்லாம் வல்ல "பரம்பொருளே"

**சென் பெனடிக்ற் வித்தியாலய மாணவர்கள்.**



### அருட்சகோதரி மேரி தேவநேசம்

**பிறந்த திகதி:** 19.05.1947
**பிறப்பு:** நவாலி
**ஆரம்பக்கல்வி:**
நவாலி சென் பீற்றர் வித்தியாலயம்.
**இடைநிலைக் கல்வி:**
மானிப்பாய் சென் ஆன்ஸ் வித்தியாலயம்
**கார்மேல் சபையில் இணைவு:** 1963
**கன்னியாஸ்திரீ பயிற்சி நெறி** - இந்தியா மங்களூர்
**உயர் படிப்புகள்** -
சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி
யாழ்.கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி

### சேவை விவரம்

யாழ் /சென் அன்ரனீஸ் மகாவித்தியாலயம்
ஊர்காவற்துறை
உதவி ஆசிரியை 14.02.77-30.04.79
யாழ்/சென் அன்ரனீஸ் மகாவித்தியாலயம்
(தனியார்)
உதவி ஆசிரியை 01.05.79 - 10.09.79
ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை வசாவிளான்
உதவி ஆசிரியை 11.09.79 - 31.12.81
யாழ்/திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி
உதவி ஆசிரியை 01.01.82 - 09.04.85
தி/சென் அன்ரனீஸ் மகாவித்தியாலயம், மூதூர்
உதவி ஆசிரியை 10.04.85 - 05.06.[illegible]
க/சரஸ்வதி மகாவித்தியாலயம், புஸெல்லாவ
உதவி ஆசிரியை 06.06.89 - 31.01.92
மன்/முருங்கன் மகாவித்தியாலயம், முருங்கன்
பகுதித் தலைவர் 01.02.92 - 09.02.94
தமிழ்ப் பெண்கள் மகாவித்தியாலயம், பதுளை
உதவி ஆசிரியை 10.02.94 - 05.02.95
கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை
உதவி ஆசிரியை 06.02.95 - 02.01.96
தி/சென்.மேரிஸ்தேசிய பாடசாலைதிருகோணமலை
உதவி ஆசிரியை 03.01.96 - 31.12.96
யா/சென். பெனடிக்ற் வித்தியாலயம், நல்லூர்
அதிபர் 2 :1 01.01.97 - 18.05.07
அதிபர் தரம் 1 07.06.2004

### பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி

'சேவை செய்வதே மேலான இன்பம்' எனும் நல்ல மொழியின் உட்பொருளுக்குள்ளே தன்னை ஆழமாகவும், அனுபவமாகவும், அறிவாகவும் புதைத்து உண்மை நிலைக்குள்ளே தன்னை உட்படுத்தி பாடசாலைப் பணிவாழ்விலே 30 வருடங்களை நிறைவு செய்யும் அருட்சகோ. தேவநேசம் அவர்களை நெஞ்சார, மனமார, நிறைந்த ஆசீர்வாதங்களுடன் வாழ்த்துவதில் நான் பெருமிதம் கொள்ளுகிறேன். இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். கல்வியும், கலையும் கண்ணாகக் கொண்டு இறைவன் துணையுடனே இனிதே பணியாற்றி ஓய்வுபெறும் இவரை நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறேன்.

**அருள்தந்தை. அ. லோறன்ஸ் ஆசீர்வாதப்பர் ஆலயம்**

### கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து

அருட்சகோதரி எம். தேவநேசம் அவர்கள் யாழ்/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க பாடசாலை அதிபராகக் கடந்த 10 வருடங்களாக மிகவும் சிறப்பாகக் கடமை புரிந்து வருகின்றார். கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் யாழ் மாவட்டத்தில் தனித்துவமான ஓர் இடத்தை இப்பாடசாலை பெற்றுள்ளமைக்கு இவரது தனித்துவமான கடமையே காரணமாகும். இதற்குச் சாட்சியாக மிளிர்வது இவர் கட்டிய மூன்று மாடிக் கட்டிடமாகும்.

இவரது காலத்தில் பாடசாலை கல்வியில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. யாழ் மாவட்டத்தில் உள்ள சிறந்த அதிபர்களுள் தலைசிறந்த அதிபராக விளங்கும் அருட்சகோதரி அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கே.வி. குணசேகரம்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர் நல்லூர்.**

### பிரியாமல் பிரியும் எம் அதிபர்

பாலெல்லாம் நல் ஆ'வின் பாலாகுமா? நூலெல்லாம் வள்ளுவரின் நூலாகுமா? மன்னிப்பெல்லாம் யேசுநாதரின் மன்னிப்பாகுமா? ஆசிரியர் எல்லாம் நல்லாசிரியராவாரா? ஆசிரியர் தகைமை பெற்று குணமென்னும் குன்றேறி நிற்பவர்தான் குரு என்னும் சொல்லுக்குத் தகுதி உடையவர் ஆவார். இத்தனை தகுதிகளும் பெற்று கறைபடாத வெள்ளங்கியுடன் அகத்தது காட்டும் அருள்முகத்துடன் எந்த நேரமும் குறு நடையுடன் பாடசாலையைச் சுற்றிவந்து கொண்டிருப்பவர்தான் அறுபது ஆண்டு அகவையையும முப்பது ஆண்டு ஆசிரியப் பணியில் இறுதிப்பத்தாணடு எமது கல்விக் கோயிலில் அதிபர் சேவையையும் நிறைவு செய்து மீண்டும் இறை தொண்டை தொடரவுள்ள அதிபர் ஆவார். அதிபர் பணி முடித்து மீண்டும் இறை பணிக்கு செல்லும் எங்கள் அதிபரை பல்லாண்டு காலம் வாழ்க என யேசுவின் அருள்வேண்டி கல்மேல் எழுத்துப் போல் எங்கள் மனதில பதிந்துள்ள எம் இனிய அதிபரை இன்று போல் என்றும் வாழ்கவென வாழ்த்தி வழியனுப்பி வைக்கின்றோம.

**சென் பெனடிக்ற் வித்தியாலய ஆசிரியர் குழாம்.**

### பாடசாலை மீது கொண்ட காதல்

நல்லூர் பகுதி சிறார்களின் கல்வியில அக்கறை கொண்டவராக 1905ம் ஆண்டு அருட்திரு ஞானப்பிரகாசம் அடிகளாரால் நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம் ஆரம்பிக்கப் பட்டது. அப்பாடசாலை ஆலய விறாந்தையில் ஆரம்பிக்கப் பட்டிருப்பினும் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இந்நிலையில் 1978ம் ஆண்டு அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்களின் பங்களிப்புடன் மேலும் புத்துயிர் ஊட்டப்பட்டது. இதன் தொடச்சியாகவே அருட்செல்வி தேவநேசம் 1997ல் இப்பாடசாலையைப் பொறுப்பேற்றார். தூய்மையான உள்ளத்துடனும் இறை பற்றுடனும் உள்ள மனிதரால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்கிய அதிபர் அருட் செல்வி தேவநேசம் அவர்கள் இப்பாடசாலை வரலாற்றில் தனக்கென் றொரு இடத்தைப் பிடித்துள்ளார். இங்கிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் நினைவுகள் இங்கேதான் இருக்கும்.

**பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்.**

### பணியினாலே மேதினி புகழ நின்றார்

அருட்சகோதரி தேவநேசம் தோற்றத்திலே குறுகியிருந்தாலும் கல்வி மாற்றத்திலே கனதிமிக்கவராகத் தனது பிள்ளைகளின் நலன் ஒன்றே தன்நோக்கு எனக் கொண்டு வழிநடந்தவர். கல்வியின் புதிய நோக்கு, அதனைக் கட்டியெழுப்பும் பணியில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்களுடன் உந்து சக்தியுடனான தூண்டும் உறவு, தெய்வபலம், நினைத்ததை முடிக்கும் செயற்திறன், அர்ப்பணிப்பு, அதீத நம்பிக்கை அவர் வாழ்வில் கைகொடுத்து நின்றன. சலியாத மனஉறுதி அவரது அறுபது ஆண்டுகள் நிறைவிலும் ஆற்றலில் ஊக்கலில் தகைமை மிக்கவராகவே காட்டி நிற்கின்றது - இன்னும் பல்லாண்டுகள் தனது தீரமிக்க சேவையைக்காட்டும் வலிமையை இறைவன் அவருக்கு வளங்கி உள்ளான். ஆனால் சேவையின் தகைமைக்கு வரம்பிடப்பட்டு இருப்பதால் தனது அருள்வழி நின்று பணியைத் தொடர்வார். கைகொடுத்து, நின்று யாழ் மண்ணிற்கு மகுடம் பதித்த அருட்செல்வி அவர்களின் சேவை நாளைய வளர்ச்சிக்கு வழிகாட்டலாக அமையும். **அதிபர்கள் சங்க தலைவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புஷ் - பிளேயர் கூட்டு இழைத்த வரலாற்றுக் குற்றம் இது!

சும்மாயிருந்த குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்து குளவிகளின் கொட்டல்களை வாங்கிக் கட்டிக்கொண்ட இக்கட்டுப் போன்ற ஒன்றில் சிக்குப்பட்டுத் தவிக்கின்றார் அமெரிக்க ஜனாதிபதி புஷ்.

மனித குலத்துக்குப் பேரழிவைத் தரவல்ல இரசாயன ஆயுதங்களை ஜனாதிபதி சதாம் ஹுசைன் தலைமையிலான ஈராக்கிய நிர்வாகம் தயாரித்து வருவதாக நொண்டிச்சாட்டுக் கூறிக்கொண்டு, ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தமது நேசப்படைகளுடன் சேர்ந்து ஆரம்பித்தார் அமெரிக்க ஜனாதிபதி.

இப்போது 'மெல்லவும் முடியாமல்' விழுங்கவும் முடியாமல் தவிப்பது போல், ஈராக்கில் தமது படைகளை தொடர்ந்து நிலைகொள்ளச் செய்யவும் முடியாமலும் அதேசமயம் வெளியேற்றவும் முடியாமலும் அந்தரிக்கின்றார் புஷ்.

இற்றைக்கு சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக்கைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாகப் பூர்த்தியாகியிருப்பதாக அவுர் அறிவித்தார்.

ஈராக் மீதான படை நடவடிக்கை வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்ததைக் குறிக்கும் விதத்தில், 'நடவடிக்கை பூர்த்தி' (Mission Accomplished) என்ற தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உரையை, 'ஏபிரஹாம் லிங்கன்' என்ற கப்பல் தளத்தில், 'மிஷன் அக்கொம்பிளிஸ்ட்' என்ற பதாகையின் கீழ் நின்றவாறு அவர் ஆற்றினார்.

அச்சமயம் அதுவரை ஈராக்கில் நடந்த யுத்தத்தில் ஆக 138 அமெரிக்கத் துருப்பினரே கொல்லப்பட்டிருந்தனர்.

வீரபராக்கிரமத் தளபதி போல அன்று 'ஏபிரஹாம் லிங் கன்' கப்பல் தளத்திலிருந்து இராணுவ நடவடிக்கை பூர்த்தி பற்றி புஷ் பிரகடனம் செய்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன.

ஆனால் இன்னும் ஈராக்கில் இராணுவ நடவடிக்கை பூர்த்தியடையவுமில்லை; அந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக புஷ் கூறிய - மனித குலத் துக்குப் பேரழிவு தரும் - எந்த ஆயுதங்களும் ஈராக்கில் உற்பத்தி செய்யப்பட்டமைக்கான அடையாளம் கூடக் கண்டு பிடிக்கப்படவுமில்லை.

புஷ் அறிவித்தமைக்கு மாறாக நான்கு ஆண்டுகள் கடந்தும் ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதி ராக சுதேசிகள் நடத்தும் போராட்டம் தொடர்ந்து வீறுகொண்டு வீரத்துடன் தொடர்ந்து வருகின்றது.

இராணுவ நடவடிக்கை பூர்த்தி என நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் புஷ் அறிவித்தபோது உயிரிழந்த 138 அமெரிக்கர்களை விட மேலும் மூவாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கத் துருப்புகள் இந்த நான்கு ஆண்டுகளில் உயிரிழந்துவிட்டனர். சுமார் 24 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் படுகாயமடைந்திருக்கின்றனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்பு, அதுவரை அமைதிப் பூங்காவாகவிருந்த ஈராக்கை தொடர்ந்து யுத்தப் பூகம்பப் பேரதிர்வுக்குள் மாட்டிவிட்டிருக்கின்றது. தினசரி பலநூற்றுக் கணக்கான சுதேசிய ஈராக்கியர் படுகொலையாகுமளவுக்கு பெரும் ரணகளத்தை அமெரிக்க ஆக்கிரமிப்பு உருவாக்கி நிற்கின்றது.

தீவிரமடைந்துள்ள மோதல்களினால் லட்சக்கணக்கான ஈராக்கியர்கள் அநாதைகளாகியுள்ளனர். உள்நாட்டுக்குள் இடம்பெயரும் அகதிகளின் எண்ணிக்கை மாதாந்தம் சுமார் 40 ஆயிரத்தால் அதிகரித்து வருகின்றது.

கடந்த அறுபது ஆண்டு காலத்தில் மத்திய கிழக்கில் ஆகக் கூடுதலான பொதுமக்கள் அகதிகளாக இடம்பெயரும் அவலத்தை ஈராக் மீதான இந்த அமெரிக்க ஆக்கிரமிப்பே உருவாக்கியிருக்கின்றது. சுமார் இரண்டு கோடி 70 லட்சம் மக்களைக் கொண்ட ஈராக்கில் இன்று பதின்மூன்று சதவீதத்தினர் பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து ஏதிலிகளாகியுள்ளனர்.

ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்வாறு பல லட்சம் அகதிகளின் இடப்பெயர்வுக்குக் காரணமாக அமைந்த அமெரிக்கா, இந்தக் காலகட்டத்தில் இவர்களில் ஆக 692 பேருக்கு மட்டுமே தனது நாட்டில் இடமளித்திருக்கின்றது.

பல்லாயிரம் பேரின் உயிர்களைக் காவுகொண்டு, பல லட்சம் பேரை ஏதிலிகளாக்கி, இடம்பெயரவைத்து, பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் வகையில், மற்றொரு நாடான ஈராக்கின் இறைமையை நிராகரித்து, அமெரிக்காவும் அதன் நேசஅணிகளும் மேற்கொண்ட இந்தக் கொடூர ஆக்கிரமிப்பு மனித குல வரலாற்றில் மன்னிக்கப்பட முடியாத பெரும் குற்றமாகும்.

இந்த வல்லாதிக்க ஆக்கிரமிப்பின் சூத்திரதாரிகள் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், இவ்விடயத்தில் அவரது நேச சக்தியாக நின்று இக்கொடூரத்துக்கு உதவிய பிரிட்டனின் பிரதமர் ரொனி பிளேயரும்தான்.

ஈராக்கியக் கொடூரத்துக்கான இரு பிதாமகர்களில் ஒருவரான பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் அடுத்தமாத முடிவுடன் ஆட்சிக்கட்டில் இருந்து விலகி வெளியேறப் போகிறார். அதுபோல ஜனாதிபதி புஷ்ஷின் பதவிக்காலமும் அடுத்த ஆண்டு இறுதியுடன் காலாவதியாகின்றது. அத்துடன் அவரும் வெள்ளை மாளிகையிலிருந்து மூடை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வீட்டுக்கு நடையைக் கட்ட வேண்டியதுதான்.

ஈராக் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து, மனித சரித்திரத்தில் இமாலய வரலாற்றுத் தவறை இழைத்தவர்கள், அவர்களின் கொடூரத்தால் ஈராக் தொடர்ந்து தவித்து, தினசரி பலநூறு உயிர்களைக் காவுகொடுத்து, வன்முறைப் புயலில் அல்லாடிக் கொண்டிருக்க, தாங்கள் சந்தோஷ மாகப் பதவிக்காலத்தை முடித்துக்கொண்டு மகிழ்வான - நிம்மதியான - ஓய்வுக்குப் போகின்றார்கள்.

இந்த வரலாற்றுத் தவறுக்காக அவர்களுக்கு சர்வதேசம் வழங்கப்போகும் தண்டனை என்ன? அவர்கள் செய்யப் போகும் பிராயச்சித்தம் என்ன?

# கற்பிட்டி கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு அடுத்த செவ்வாய் வரை நீடிக்குமாம்

கொழும்பு, மே 19

கற்பிட்டி பள்ளியாவத்த தீவில் கடந்த புதன்கிழமை கடல் நீர் புகுந்து ஏற்படுத்திய பாதிப்பு நிலை அபாயம் இன்னும் தொடரும் என அறிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் கடல் கொந்தளிப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை தொடர்ந்து நீடிக்கும் என்று தேசிய கடல் நிலை ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் அமைப்பு அறிவித்துள்ளது.

புத்தளம், கற்பிட்டி பள்ளியாவத்தை தீவுக்குள் கடந்த செவ்வாயன்று நான் அடி உயரத்துக்கு கடல் நீர் புகுந்தது. எனினும் அங்கிருந்த 60 மீனவர் குடும்பங்களும் காப்பாற்றப்பட்டன.

பள்ளியாவத்தைத் தீவு 20 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டது. அங்கு மீனவர் குடும்பங்களே வசித்து வந்தன.

இந்தத் தீவுக்குள் கடல் நீர் நான்கு அடி உயரத்துக்கு புகுந்தது. வாயுமண்டலத்தில் ஏற்பட்டிருந்த அதிக ஊஷ்ணமும் கடும் காற்றுங் காரணமாகவே இந்நிகழ்வு இடம்பெற்றது. இது சுனாமி நிலைமை அல்ல என்று வளிமண்டத் திணைக்களம் தெரிவித்தது.

சாதாரண வளிமண்டல அமுக்கம் உருவாகும்போது கடல் நீர் கரையைத் தாண்டிவருவதனால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-ப-1)

## ஊரடங்கு நேர மாற்றம் மறு அறிவித்தல் வரை

யாழ்ப்பாணம், மே 19

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் ஊரடங்கு நேரத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றம் மறுஅறிவித்தல் வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று யாழ். பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இரவில் 8 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்படும் ஊரடங்கு மறுநாள் அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என்று பொலிஸ் தரப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டது. (அ-1)

## மருத்துவ மாதுக்களுக்கான திறமை காண் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 19

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் பணியாற்றும் குடும்பநல மருத்துவ மாதுக்களுக்கான வினைத் திறமை காண் தடைப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தாதியர் பயிற்சி கலாசாலையில் நடைபெற உள்ளது.

புதிதாக நியமனம் பெற்ற II'ஆ' பிரிவைச் சேர்ந்த குடும்ப நல மருத்துவ மாதுக்களையும் ஏற்கனவே வினைத் திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையாத குடும்ப நல மருத்துவ மாதுக்களையும் இந்த பரீட்சையில் தோற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாக விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினூடாக இன்று சனிக்கிமை நண்பகலுக்கு முன்னர் யாழ். பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-202)

# கடத்திச் செல்லப்பட்ட மூவர் வவுனியாவில் சுட்டுக் கொலை

வவுனியா, மே 19

வவுனியாவில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மூன்று பேரின் சடலங்கள் நேற்றுக்காலை பொலிஸா ரால் மீட்கப்பட்டிருக்கின்றன.

வவுனியா கூமாங்குளம் பகுதியிலேயே இந்தச் சட லங்கள் காணப்பட்டன. கொல்லப்பட்ட மூவரும் கூலித் தொழில் செய்து வந்த இளம் குடும்பஸ்தர்கள் என்று அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

சுப்பிரமணியம் சந்திரசேகரன் (வயது - 28, - இரண்டு பிள்ளைகளின் தந்தை) சின்னத்துரை விக்னேஸ்வரன் (வயது - 24,- இருகுழந்தைகளின் தந்தை), மனமோகன் மோகனதாஸ் (வயது - 24) ஆகியோரே கொல்லப் பட்டிருக்கின்றனர்.

இவர்கள் மூவரும் அவர்களது வீடுகளில் இருந்து இரவு வேளை அடையாளம் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

வவுனியா மருத்துவமனையில் சடலங்களைப் பார்வையிட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் பூர்வாங்க மரண விசாரணைய்ய நடத்தினார். (சி)

## உரும்பிராய், கொக்குவில் பகுதிகளில் தேடுதல்

உரும்பிராய் அன்னங்கையிலிருந்து கொக்குவில் வரையான பிரதேசம் கடந்த இருதினங்களாகப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அன்னங்கை, கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, செருக்கப்புலம் வீதி உள்ளடங்கிய பிரதேசத்தில் புதன்கிழமையும் வியாழக்கிழமையும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ-1-68)

## நிகழ்வுகள்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் மெதடிஸ்த நிவாரண அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான பிராந்திய அலுவலகத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புத்தூர் சென்லூக்ஸ் மெதடிஸ்த வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்ராஸும் கலந்துகொள்வர். (1-203)

* * *

யாழ்ப்பாணம், மே 19

யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையிலான அழகியல் போட்டிகள் (அழகியல், நடனம், சங்கீதம்) எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தெரிவித்தார். (1-202)

* * *

யாழ்ப்பாணம், மே 19

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க பண்புத மாணவர்களுக்கான கலந்துரையாடல் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். அனைத்துத் தரப்பு மாணவர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203)

## கரம்பொன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தினோம். அதில் அவர்கள் கொல்லப் பட்டுள்ளனர் என கடற்படையினர் நீதிவானிடம் தெரி வித்தனர்.

பிரஸ்தாப சடலங்களை அவர்களது உறவினர்கள் இனங்காட்டினர்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஞானரூபன் யூட்சன் (வயது 18) என்பவரது சடலத்தை அவரது தாயும், இளைஞரின் சிறிய தந்தையான றொபேட் தேவதாஸ் (வயது 32) என்பவரது சடலத்தை அவரது மனைவியும் அடையாளம் காட்டினர். சடலத்தை பிரேத பரிசோதனையின்பின் உறவினர்களி டம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த மரணங்கள் குறித்து உறவினர்களின் சாட்சியங் களை நீதிமன்றம் பின்னர் பதிவு செய்யும் என்று நீதிவான் தெரிவித்தார். (அ-1)

## ஓமந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பிரதிநிதிகளுடனும் நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குமாறு இருதரப்பையும் அவர்கள் கோரியுள்ளனர்.

இது சம்பந்தமாக இதுவரை நடந்த பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று செஞ்சிலுவைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பாதை மூடப்பட்டதால், கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்கு செல்லமுடியாத நிலையில் 46 நோயாளர்கள் உள்ளனர் என கிளிநொச்சி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி என்.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 12 பேர் சிறுவர்கள், 6 பேர் கர்ப்பிணிகள் மற்றும் 2நாள், 12நாள், 18 நாள் நிரம்பிய சிசுக்களும் அடங்குவர் என அவர் தெரிவித்துள்ளார்.

அபாய நிலையில் உள்ள இந்த நோயாளர் களுக்கு உடன் சிகிச்சை அளிக்க வசதியாக நோயளர்களை வவுனியாவுக்கு அழைத்துச் செல்ல வழித்துணை வழங்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேச குழு, யுனிசெவ் அமைப்புகளைக் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 6 | ஞாயிற்றுக்கிழமை 20.05.2007 |
| திதி: சதுர்த்தி | முன்னிரவு : 07.01 |
| நட்சத்திரம்: | திருவாதிரை பிற்பகல் : 01.17 |
| [illegible] | : 08.52 - 10.22 |
| [illegible] | : 04.22 - 05.52 |

## பேசாலை மீனவர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 19

பேசாலைக் கடலில் கடற்றொழிலில்ஈடுபட்டு,படகுகவிழ்ந்ததால்வேலணையில் கரை ஒதுங்கிய மீனவரை ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று விடுவித்தது.

பேசாலையைச் சேர்ந்த பெலிஸ்டஸ் மிரண்டா என்ற மீனவரே கரை ஒதுங்கியிருந்தார்.

இவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நீதிவான் ஜெயராமன் றொக்ஸி முன் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

நேற்று மீண்டும் அவர் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட போது, அவரை விடுதலை செய்த நீதிவான், அவர் சொந்த இடத்துக்கு திரும்புவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (1)

## பொருள்களின் திடீர் விலையேற்றம் செயலகத்தில் நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 19

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளமை குறித்து ஆராயும் பொருட்டு நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற உள்ளது.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர்கள், ப.நோ.கூ. சங்கங்களின் பொது முகாமையாளர்கள், தலைவர்கள் ஆகியோர் அழைக் கப்பட்டுள்ளனர். (அ-1)

## பல்கலைக்கழகச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவை உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் பலாலியில் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை சந்தித்துக் கலந்துரையாடினர். மாணவர்களின் பாதுகாப்பான கல்விச் செயற்பாட்டுக்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டதாக நம்பமாகத் தெரியவந்தது. (அ-1-111)

## மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென படைத்தரப்பையும் வற்புறுத்தி வருகின்றோம்.

மாணவர்களின் நியாயமான போராட்டங்களுக்கு எமது ஒத்துழைப்பு எப்போதும் உண்டு. ஆனால், ஒத்து ழைப்பு வழங்குவதாகக் கூறிக்கொண்டு தமிழ்க் கூட்டமைப்பு மாணவர்களின் நியாயமான போராட்டத்தை, பஸ் எரிப்பு நடத்தி வன்முறைப் போராட்டமாக மாற்றியதோடு, பாடசாலைகளை மூடிவிடும்படியும் மாணவர்களை கல்வியை கைவிடும்படியும் கூறியுள்ளதோடு, அதை ஊக்குவிப்பதுமானது எமது சமூகத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

எமது மாணவச் செல்வங்களைப் பாதுகாப்பதற்கு மாறாக அவர்களை பலி கொடுக்கவும் அவர்களின் கல்வியை சீர்குலைக்கவுமான புலிகளின் திட்டத்தை நிறைவேற்றும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சமூக விரோத நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எத்தனையோ நெருக்கடிக்களுக்கு முகம் கொடுத்த போதும் கல்வியை இழக்காத எங்கள் சமூகம் தற்போதைய சவால்களை எதிர்கொண்டு தமது கல்வியைத் தொடர வேண்டும். மாணவர்களின் பாதுகாப்புக்கும், கல்விக்கும் அச்சுறுத்தலாக எவர் இருந்தாலும் அதை நாம் கண்டிப்போம். அத்தகையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவ தோடு, மாணவர்களுக்கு தமது கல்வியைத் தொடர்வதற் கான இயல்புச் சூழலையும் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

**தற்போது ஆரம்பமாகியுள்ள புதிய பயிற்சி நெறிகளுக்கு பின்வரும் பிரிவுகளுக்கு மேலும் அனுமதிகள் உண்டு**

- கேக் ஐசிங் ❖ கூந்தல் அலங்காரம் ❖ உணவு தயாரித்தல் (சனி, ஞாயிறு பிரிவு)
- Fabric Painting ❖ கைவேலை ❖ பூவேலை (திங்கட்கிழமை மட்டும்)
- அடிப்படை தையல் பயிற்சி ❖ சாறிபிளவுஸ் ❖ சுரிதார் ❖ விரும்பிய உடைகள் (சனி, ஞாயிறு பிரிவு, கிழமைநாள் பிரிவு)

**மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1 மணிவரை அறிந்து கொள்ளலாம்.**

**பதிவாளர்.**


## கண்ணீர் அஞ்சலி

எமது அப்பலோ வைத்தியசாலையில் கடமை புரியும்
குமுதினியின் தந்தை
**ந.நகுலராஜா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது வைத்தியசாலையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அப்பலோ வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.** உரிமையாளர்களும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து குணசேகரம் (கந்தசாமி)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து குணசேகரம் நேற்று (18.05.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து-பஞ்சாட்சரம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சதாசிவம்-அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ரூபவதியின் அன்புக் கணவரும் லவநீசனின் (கனடா) தந்தையும் பரமேஸ்வரி, சிவனேஸ்வரி, சிவரூபன் ஆகியோரின் சகோதரனும் இந்திரவதி, சந்திரவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (19.05.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வீரபத்திரர் கோயிலடி, கல்வியங்காடு.** **ரூபவதி** *(ரூபா-மனைவி).*

### தம்பு சிவானந்தம்



76/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பு சிவானந்தம் 16.05.2007 புதன் கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற தம்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ருக்குமணியின் அன்புக் கணவரும் செல்வராஜா, பாலச்சந்திரன் காலஞ்சென்ற ஆனந்தரஞ்சனி, ஞானசேகரன் மற்றும் விஜயசிங்கம், ரவீந்திரன், செல்வராணி, இந்திராணி, பிறேமகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாபன், கந்தசாமி, சுப்பிரமணியம், திலகவதி, காலஞ்சென்ற கமலாதேவி, பவளராணி, பாலினி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற நிர்மலன், புவனேஸ்வரன், காலஞ்சென்ற பிரபாகரன், தேவகி, ஜெனார்த்தனன், சௌமியா, சோபனா, சத்தியா, அனுசூயா, யசோதா, அமுதசாகரன், ரஜனி, ரூபி, ராஜன், சுஜன், அனித்தா, அஜித்தா, றஜிதா, பிரதீபன், ஜாளினி, நிறஞ்சன், சுதர்ஷன், ஸ்டிபன், போல்ராஜ், விதுஷனா, கௌதன், ஜெனனி, ஜானிக், சந்துரு, சங்கீத், ஜெயம், கமலன், தர்மராஜ், எட்வின், சதீஸ், ஜெயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் துளசி, திருமாறன், கஜன், ஜயசங்கரி, கீர்த்தனா, நிலாஜி, நிஜித், நிலானி, அனுஸ், ஜனுஷன், ஜனுஷா, சரணீயா, சிறிராம், ஜெனிகா, பூமிஜா, பூமிகா, திரிஷா, சூரியா, கானிஜா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(60452) **குடும்பத்தினர்.**

### சின்னத்தம்பி பொன்னம்பலம்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் நேற்று (18.05.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்வம் தம்பதியரின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் அமரர் சுப்பையா, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரனும் அன்னப்பிள்ளை, கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், செல்வராசா (ஆண்தாதி, தெல்லிப்பழை வைத்தியசாலை), அமரர் பரராசா, சண்முகராசா (லண்டன்), அழகராசா (மக்கள் வங்கி - கொழும்பு), விஜய ராசா (சுவிஸ்), பவளவாணி, தேவகி, ரஞ்சினி, நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி, கலாரஞ்சினி, கமலேஸ்வரி (ஆசிரியர் - கொழும்பு), சாந்தகுமாரி, விஜயநாதன் (பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், கிளிநொச்சி), கருணாகரன், லோகிதன், தவரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2007) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாவற்குழி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடி.*
தகவல்:
**மனைவி (தொ.பே. 0779118613)**

## கொழும்பில் இளைஞர் கடத்தல்

கொழும்பு மே 19

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் கடமையாற்றும் ஒருவர் நேற்றுக் கொழும்பில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார் எனப் பொரளை பொலிஸ் நிலையத்தில் அவரது மனைவி முறையிட்டிருக்கிறார்.

திருகோணமலையைச் சேர்ந்த பாக்கியநாதன் விஜயசாந்தன் என்பவரே கடத்தப்பட்டவராவர்.

இவர் முன்னர் பத்திரிகையாளராகக் கடமையாற்றியவர் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

(த - 09)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
உதயகுமார்-அனுசூயா தம்பதியரின்
செல்வப் புதல்வி
**காவியா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.05.2007) சனிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வாழ்த்துபவர்கள்:-
அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தி, சித்தப்பாமார், மாமன்மார், அத்தைமார், அண்ணா, மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் துணையுடனும் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் துணையுடனும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



19.05.2007

சி.உதயகுமார்
(தந்தை—தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, நயினாதீவு —03).
நயினாதீவு, 3ஆம் வட்டாரம், (வடக்கு).

## நித்திரையிலிருந்த பெண்ணின் தாலிக்கொடி அபகரிப்பு

நல்லூர், மே 19

நல்லூர், வைமன் வீதியில் நேற்று முன்தினம் இரவு வீடு ஒன்றிற்குள் புகுந்த திருடன் நித்திரையிலிருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளான்.

அதிகாலை 2 மணியளவில் வீட்டின் பின்கதவு வழியாக உள்நுழைந்த திருடன் நீண்ட நேரம் ஒளிந்திருந்தே இந்தத் திருட்டை மேற்கொண்டிருக்கலாம் என்றும் -

அறைக்குள் இருந்த உடுப்புப் பெட்டிகள் கிளறப்பட்டு அங்கு எதுவும் கிடைக்காத நிலையில் நித்திரையிலிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த 9 பவுண் பெறுமதியான தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளான் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(202-111)

## தொண்டர் லிகிதர் விண்ணப்பம்

மேற்படி வெற்றிடத்திற்கு இலங்கைச் செஞ்சிலுவை சங்கத் தொண்டர்களை அவரவர் பிரிவுத் தலைவர்களூடாக விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம். நேர்முகப் பரீட்சை 26.05.2007 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் நேர்முகப் பரீட்சை, எழுத்துப் பரீட்சைக்கு ஆயத்தமாகக் கிளை அலுவலகத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்**
***இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், இல.73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.***

## தவறிவிட்டது

Sony Erricson w800i, Orange colour கையடக்கத் தொலைபேசி 17.05.2007 அன்று கட்டுடைக்கும் சுதுமலைக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி: 021 222 7454, 077 5386237
முகவரி: 277, யாழ்வீதி, மானிப்பாய்.


**Sky Computer System**
No, 89 , Kandy Road, Chundikuli, Jaffna.
Hot-line: 021 222 9109

Kingston DDR 256MB 3750/-

| | |
|---|---|
| Power tree UPS | - 6,500/- |
| Hp Printer (DeskJet ) | - 7,000/- |
| Flash Drive 2GB(Kingston) | - 4,200/- |
| Samsung Hard Disk80GB SATA | - 7850/- |
| Samsung Hard Disk80GB IDE | - 8000/- |

A4 Paper ( 70 GSM ) - 600

| | |
|---|---|
| Mother Board (ASUS LGA) | DVD Writer (Samsung). |
| Mother Board (Mercury 478) | Combo Drive (Samsung). |
| CD Drive (ASUS) | Epson Printer (Lq300+II). |
| Modem. | |

ஞாயிறு திறந்திருக்கும்
கச்சேரிக்கு அருகில்


**A/L 2009 வர்த்தகப் பிரிவு** வகுப்புகள் ஆரம்பம் **20.05.2007** ஞாயிறு காலை 9 மணி

பொருளியல் - K. கௌரிசன்
வணிகக்கல்வி - T.சுரேசன்
கணக்கீடு - C.தர்சன்

A/L 07,08 மாணவர்களுக்கான வகுப்புகள் ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
07 கம்பனி ஆரம்பம் 21.05.2007 திங்கள்
- புதிய மாணவர்களுக்கு விசேட கவனம்
- தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
- பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

தொடர்பு: 0776629473
***NEW BUSINESS ACADEMY***
566/1, மில்க் வைற் சோப் தொழிற்சாலை முன் [illegible]


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**டானியல் தேவசகாயம் (செல்லத்தம்பி)**
(இளைப்பாறிய களஞ்சியக் காப்பாளர், காங்கேசன்துறை)

மலர்வு 30★12★1934 உதிர்வு 19★05★2006

அன்பினாலும் அமைதியான பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த தந்தையே...!
இறைவாழ்வில் இகம் வென்றீர்
குறையின்றி எமை வாழவைத்தீர்
மறைந்தும் மறையாமல் நினைவுகளால்
வாழ்கின்றீர் எம்முடன்....!

இவரின் ஆத்ம அமைதிக்காக இன்று (19.05.2007) சனிக்கிழமை காலை 7 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியிலும், அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.** *இவரின் பிரிவால் துயருறும்,* **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### நன்னித்தம்பி நகுலராஜா

கொக்குவிலை பிறப்பிடமாகவும் பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி நகுலராஜா நேற்று (18.05.2007)வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் சிவமலரின் அன்புக்கணவரும் நாகேஸ்வரி, நாகராஜா ஆகியோரின் சகோதரனும் நந்தினி, சுமதினி, சுபாஜினி, குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(19.05.2007)சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.** *குடும்பத்தினர். ந.சிவமலர் (மனைவி).*

### சிற்றம்பலம் கந்தமூர்த்தி

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முன்னாள் யாழ்.குடும்ப நீதிமன்ற ஆலோசகரும் (Family Counselor of Jaffna), யாழ்.மாவட்ட சாரண ஆணையாளரும் (Jaffna Scout District Commissioner), யாழ்.சமாதான நீதிவானும்(J.P.), யாழ். வடஇலங்கைச் சங்கீதசபை காரியதரிசியும், யாழ்.வீடமைப்புத் திட்ட காரியதரிசியும், யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவரும் ஆகிய சிற்றம்பலம் கந்தமூர்த்தி 16-05-2007 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் (இங்கிலாந்து) அன்புக் கணவரும் கலாமதி (இங்கிலாந்து), கலாரவி (இங்கிலாந்து), கலாரெஜி (நோர்வே), கலாரமணி (இங்கிலாந்து), கலாவண்ணன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், ஜெயந்தி, சலோத்தா, செல்வகுமார், கோகிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரி, யாழினி, விக்டோரியா, கிறிஸ்ரினா, அரண், கோபி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, அன்னம்மா, திலகவதி, பாலராஜா, விஸ்வலிங்கம் மற்றும் தங்கம்மா (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யாழ்ப்பாணம் அரசகுலசிங்கத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-05-2007 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிமுதல் 1 மணிவரை Merton Hall, 78 Kingston Road, South Wimbledon, London SW19 9LA இல் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பகல் 1மணிக்கு North East Surrey Crematorium, Lower Morden Lane, Morden SM4 4NU இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| மனைவி: 0044-020 86 87 22 71 | கலாரவி: 0044-079 46 42 32 79 |
| கலாரெஜி: 0044-079 52 90 84 86 | கலாவண்ணன்: 0044-079 56 84 52 25 |
| கலாமதி: 0044-078 14 42 20 63 | கலாரமணி: 0044-079 60 74 60 25 |

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org